# 13 பஸ் நிலையம்

**அறிவித்தலைச் செவிமடுப்போம்.**




- ■ தம்பி! தம்பி! திருகோணமலை பஸ் எத்தனை மணிக்கு?
- ● ஐயா அறிவித்தலைக் கேளுங்கள்.

*1 : கண்டிக்குச் செல்லவுள்ள பஸ் வண்டி இப்பொழுது புறப்படும்.*

*2: யாழ்பாணம் செல்லவுள்ள பஸ் வண்டி முற்பகல் 10 மணிக்குப் புறப்படும்.*

*3: திருகோணமலைக்குப் புறப்படவுள்ள பஸ் வண்டி பிற்பகல் 02 மணிக்குப் புறப்படும். நன்றி.*

- ■ ஓ... சரி... சரி... இன்னும் கன நேரம் இருக்கு.

**அறிவித்தலை வாசியுங்கள். மாணவர்களைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.**

## செயற்பாடு 1

செவிமடுப்போம். சரி (✓), பிழை (✗) இடுவோம்.

1. கண்டி பஸ் இப்பொழுது புறப்படும். ☐ ☐

2. யாழ்ப்பாண பஸ்வண்டி பிற்பகல் 1 மணிக்குப் புறப்படும். ☐ ☐

3. திருகோணமலை பஸ் பிற்பகல் 10 மணிக்குப் புறப்படும். ☐ ☐

## செயற்பாடு 2

நேர அட்டவணையைப் பார்த்து விடையளிப்போம்.

| இடங்கள் | புறப்படும் நேரம் |
|---|---|
| கண்டி | மு.ப 08.00 மணி |
| யாழ்ப்பாணம் | மு.ப 09.00 மணி |
| காலி | மு.ப 10.00 மணி |
| மாத்தறை | மு.ப 01.00 மணி |
| பதுளை | பி.ப 02.00 மணி |
| திருகோணமலை | பி.ப 03.00 மணி |
| மட்டக்களப்பு | பி.ப 04.00 மணி |
| இரத்தினபுரி | பி.ப 06.00 மணி |



## செயற்பாடு 3

சோடிகளாக இணைந்து வினாக்களுக்கு விடையளிப்போம்.

- கண்டி பஸ் எத்தனை மணிக்குப் புறப்படும்?

| | |
|---|---|
| கண்டி பஸ்<br>கொழும்பு பஸ்<br>காலி பஸ்<br>மாத்தறை பஸ்<br>திருகோணமலை பஸ்<br>பதுளை பஸ் | → எத்தனை மணிக்கு புறப்படும்? |

செவிமடுப்போம் விடையளிப்போம்.

- கண்டி பஸ் முற்பகல் 08.00 மணிக்குப் புறப்படும்.

| | | | |
|---|---|---|---|
| பி.ப/மு.ப | ஒரு | மணிக்குப் | → புறப்படும். |
| | இரண்டு | மணிக்குப் | |
| | மூன்று | மணிக்குப் | |
| | நாலு | மணிக்குப் | |
| | ஐந்து | மணிக்குப் | |
| | ஆறு | மணிக்குப் | |
| | ஏழு | மணிக்குப் | |
| | எட்டு | மணிக்குப் | |
| | ஒன்பது | மணிக்குப் | |
| | பத்து | மணிக்குப் | |

## செயற்பாடு 4

**செவிமடுத்துக் கூறுவோம்.**

- இப்பொழுது நேரம் முற்பகல் 10.00
- இப்பொழுது பஸ் எங்கு புறப்படும்?

இப்பொழுது பஸ் → கண்டிக்குப் / மாத்தறைக்குப் / யாழ்பாணத்திற்குப் / காலிக்குப் / திருகோணமலைக்குப் → புறப்படும்.

## செயற்பாடு 5

**நேரம் கூறுவோம்**

இப்பொழுது எத்தனை மணி?

1.  இப்பொழுது மு.ப 8 மணி 

2.  இப்பொழுது பி.ப 1 மணி 



3. இப்பொழுது பி.ப ____________ 

4. இப்பொழுது பி.ப ____________ 

5. இப்பொழுது மு.ப ____________ 

## செயற்பாடு 6

**சோடிகளாக இணைவோம், ஒருவர் நேரத்தைக் காட்ட மற்றவர் நேரத்தைக் கூறுவோம்.**

இப்பொழுது பஸ் எங்கு புறப்படும்.

இப்பொழுது பஸ் கண்டிக்குப் புறப்படும்.

இப்பொழுது என்ன நேரம்?

இப்பொழுது பி.ப. 4 மணி.